பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 .12 . 2024 7. 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நெதர்லாந்துடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டுப் பிரதமர் டிக் ஷூஃப்-புடன் பிரதமர் திரு நரேந்திர மோடி பேச்சு நடத்தியுள்ளார்.
2. ஒரே நாடு — ஒரே தேர்தல் மசோதா தொடர்பாக ஆய்வு செய்ய 31 உறுப்பினர்கள் அடங்கிய நாடாளுமன்ற கூட்டுக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.
3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதி ஆண்டில் ஆறு கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
4. மும்பை கடல் பகுதியில் இரண்டு படகுகள் மோதி ஏற்பட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.
5. இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று நடைபெறுகிறது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

நெதர்லாந்துடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டுப் பிரதமர் டிக் ஷூஃப்-புடன் பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் நீர்வளம், வேளாண்மை, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து நெதர்லாந்து பிரதமருடன் ஆலோசனை நடத்தியதாக கூறியுள்ளார்.,

பாதுகாப்பு, வர்த்தகம், பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்தும் பேசியதாக அவர் கூறியுள்ளார்.

பல்வேறு மண்டல சர்வதேச விவகாரங்கள் குறித்தும் நெதர்லாந்து பிரதமருடன் ஆலோசனை நடத்தியதாக திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா தொடர்பாக ஆய்வு செய்ய 31 உறுப்பினர்கள் அடங்கிய நாடாளுமன்ற கூட்டுக்குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

இதில் மக்களவை உறுப்பினாக்ள் 21 பேரும், மாநிலங்களவை உறுப்பினர்கள் பதது பேரும் இடம்பெற்றுள்ளனர்.,

பிஜேபி சார்பில் திரு அனுராக் தாக்கூர், திரு பர்ஷோத்தம் ரூபாலா, காங்கிரஸ் கட்சியின் சார்பில் திருமதி பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சார்பில் திருமதி சுப்ரியா சுலே, திரிணமூல் காங்கிரஸ் சார்பில் திரு கல்யாண் பானர்ஜி, திமுக சார்பில் திரு டி எம் செல்வகணபதி உள்ளிட்டோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதாா இந்த கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு இன்று அனுப்பப்படவுள்ளது.

[]<<<>>>[]

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதி ஆண்டில் ஆறு கோடியே 70 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ்சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக மாநில அரசுகளின் அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அவர், ஊரக வேலை உறுதி திட்டத்தை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

சமூகத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு இத்திட்டம் பெரிதும் பயனளிப்பதாக அவர் கூறினார்.

இந்த ஆண்டு இதுவரை 63 லட்சம் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் உத்திரபிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு உள்ளிட்ட 20 மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

திரைப்படத்துறையில் சர்வதேச முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டின் பல்வேறு மொழிகளில் சராசரியாக ஆண்டுக்கு இரண்டாயிரம் திரைப்படங்கய் தயாரிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் திரைப்படங்களை தயாரிப்பதற்கான நடைமுறைகளை அரசு எளிமைப்படுத்தி உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஒற்றைச்சாளர அனுமதி நடைமுறை இந்திய மற்றும் சர்வதேச திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு பயனளிப்பதகாவும் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாட்டில் காச நோயால் ஏற்படும் இறப்பு விகிதம் கடந்த சில ஆண்டுகளில் பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் கூறியுள்ளார்.

காசநோய் ஒழிப்பு தொடர்பான 100 நாள் செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு கூட்டம நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அமைச்சர், 2015-ஆம் ஆண்டு முதல் காச நோய் பாதிப்பு தொடர்ந்து குறைந்து வருவதமாக அவர் கூறினார்.

இறப்பு விகிதம் 28 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக குறைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பேசிய இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ், இந்த இயக்கம் காசநோய் தொடர்பான விழிப்புணர்வை மேலும் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் 250-க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

தேசிய சித்த மருத்துவ தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சித்தா உள்ளிட்ட பாரம்பரிய இந்திய மருத்துவ முறைகளை ஊக்குவிக்க மத்திய அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக சித்தர் அகத்தியரின் பிறந்த நட்சத்திரமான மார்கழி ஆயில்ய நாளில் 2018-ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சித்த மருத்துவ அமர்வுகள், மூலிகை கண்காட்சி, நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகள் உள்ளிட்டவைகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் மத்திய ஆயூஷ் மற்றும் சுகாதாரத்துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ், மாநில மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இந்த தினத்தையொட்டி சென்னை தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் ஒரே நேரத்தில் 500-க்கும் மேற்பட்டவர்களுக்கு வர்ம சிகிச்சை அளிக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய மத்திய ஆயூஷ் அமைச்சகத்தின் செயலாளர் திரு வைத்திய ராஜேஷ் கொட்டேச்சா, சித்த மருத்துவ முறையின் ஒரு பிரிவான வர்ம சிகிச்சை சிக்கலான நோய்களை குணப்படுத்தும் தன்மை கொண்டது என்று கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தின் இயக்குநர் திருமதி மீனாகுமாரி, கின்னஸ் சாதனை நிகழ்வாக இந்த வர்ம சிகிச்சை தொடர்பான நிகழ்ச்சி நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - மீனாகுமாரி ) --- 30 செகண்ட்*

**[]<<<>>>[]**

தோல் பொருட்கள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு பல்வேறு சலுகைகளை வழங்கி வருவதாக வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தோல் மற்றும் காலனி பொருட்கள் தொடர்பான விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த தொழில் துறையினர் சர்வதேச தரத்திலான உற்பத்தியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தோல் பொருட்கள் உற்பத்தியின்போது சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமென்று திரு பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

சிறுபான்மையினர் நலனில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு கூடுதல் அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினர் உரிமைகள் தினத்தையொட்டி நேற்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அனைவரும் இணைவோம் - அனைவரும் உயர்வோம், அனைவரின் வளர்சசி – அனைவரின் நம்பிக்கை என்ற தார மந்திரத்தின் அடிப்படையில் மத்திய அரசு செயல்படுவதாகக் கூறினார்.

சிறுபான்மையினரின் நலனுக்கு மத்திய அரசு செயல்படுத்தி வரும் கல்வி, வேலைவாய்ப்புக்கான திட்டங்களை திரு ஜார்ஜ் குரியன் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இஸ்லாமிய, சீக்கிய, கிறிஸ்துவ, பௌத்த சமண சமயங்களைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

[]<<<>>>[]

மும்பை கடல் பகுதியில் இரண்டு படகுகள் மோதி ஏற்பட்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் பத்து பேர் பொதுமக்கள் எனவும், மூன்று பேர் கடற்படை வீரர்கள் எனவும் மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்துள்ளார்.

101 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினர்.

கடலோர காவல்படையும், கடற்படையும் இணைந்து மீட்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்றும் திரு தேவேந்திர பட்நவிஸ் அறிவித்தார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதிமுர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி உள்ளிட்டோர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழ்நதவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் வழங்கப்படும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

இதனிடையே இச்சம்பவம் தொடர்பாக மும்பை கொலாபா காவல் நிலையத்தில் கடற்படை படகின் ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மற்றும் இறுதி மகளிர் டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மும்பையில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

தேசிய துப்பாக்கி சூடும் போட்டியில் ஆடவர் 50 மீட்டர் ரைபில் பிரிவில் கடற்படையைச் சேர்ந்த கிரண் ஜாதவ் பட்டம் வென்றார்.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் பெங்கால் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தமிழக அணி 60-29 என்ற புள்ளி கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் பட்னா அணி, தெலுகு அணியை வென்றது.

***End of News***